1971 ஜூன் 28]

செங்கற்பட்டு மாவட்டத்தில் வேளாண்மை வருமான வரி வசூல்.

***70. வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் 1966–67, 1967–68 ஆண்டுகளில் விவசாய வருமான வரி குறிப்பிட்ட காலத்தில் செலுத்தாதவர்கள் எவ்வளவு பேர் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

வருடம்	வரி செலுத்தாதவர்களின் எண்ணிக்கை
1966-67	116
1967-68	163

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, நிலத்திற்கு உச்ச வரம்பு இருக்கின்ற காரணத்தினால் அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் இருப்பதே அவசியமில்லை. ஆகவே, அதை ரத்து செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ் தேவையில்லை என்பது அம்மையார் அவர்களுடைய கொள்கையாக இருக்கலாம். அது அவசியம் என்பது அரசாங்கத்தின் கருத்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் பாக்கி எவ்வளவு என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 1966-67-ல் ரூ. 21,622.56 பை, 1967-68-ல் ரூ. 20,865.18 பை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, விவசாய வருமான வரி கொடுக்காதவர்கள் பேரில் மிகவும் கெடுபிடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற பரவலான எண்ணம் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அந்தக் கெடுபிடியைக் குறைக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, விவசாயிகளின்மீது எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் கெடுபிடி என்று சொல்வதற்கு இல்லை. வரிகளைக் கொடுத்துவிட்டால் நடவடிக்கை என்ற பேச்சுக்கே இடம் இருக்காது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, இத்தனை பேர்கள் வரி செலுத்தாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? வரி செலுத்துவோர் தாமதமா, அல்லது அதிகாரிகளின் குறைபாடு காரணமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, முதல் ஆண்டில் புயல் அடித்ததுதான் காரணம். இரண்டாவது ஆண்டில் ஏற்பட்ட வறட்சி காரணமாக இப்படி ஏற்பட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, 12½ ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்குமேல் நிலங்கள் வைத்திருப்பவர்கள் விவசாய வருமான வரி கட்டி வந்தார்கள். இப்போது அந்த உச்சவரம்பை 7½ ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஆக்கிவிட்டீர்கள். இதனால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மீண்டும் அதை 12½ ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உயர்த்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்போதைக்கு இல்லை.

Compaints against Special Commercial Tax Officer, Tirunelveli.

* 71 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether a petition, dated 9th May 1970 has been received from a few villagers of Rajakrishnapuram in Nangunery taluk of Tirunelveli district regarding the corrupt practices of the Special Commercial Tax Officer, Tirunelveli; and

(b) if so, whether any action has been taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

(அ) ஆம்.

(இ) மனுவில் அடங்கியுள்ள குற்றச்சாட்டுகள் புலனாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

Appointment of Government Pleader for Madras City.

* 72 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to appoint a Government Pleader for Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Industrial Estate at Hosur.

* 73 Q.—Thiru B. VENKATASAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to start an Industrial Estate at Hosur in Dharmapuri District; and

(b) if so, when it will be started?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) இத்திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

Thiru K. S. KOTHANDARAMIAH: The sanction of industrial estate at Hosur is pending for the last so many years May I know from the Hon. Minister when he is going to sanction it?